# In the Court of the District Munsif, Eraniel

**Original Suit No. 28/2022** **Date:17.02.2026.**

**(PW1)- ஜானகி**

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

1. எனது நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டவாறு வழக்கு பி பட்டிகை பாதை வருவேல்நாடார் மற்றும் வைத்தியநாடாருக்கு பாத்திய பட்ட சொத்து என்பதை காட்டுவதற்க்கு நீதிமன்றத்தில் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தற்போது பி பட்டிகை சொத்தின் உரிமை புஸ்பம் மற்றும் ஜோஸ்வா என்பவரிடம் உள்ளது என்றால் இருக்கும். நான் குறிப்பிட்டுள்ள பி பட்டிகை சொத்து பிரதான சாலையில் தொடங்கி பிரதிவாதிகளின் சொத்தில் முடிவடைகிறது என்றால் சரிதான்.

2. பிரதிவாதியின் சொத்தின் குறுக்கே சென்றுதான் ஏ பட்டிகை சொத்திற்க்கு செல்ல வேண்டும் என்றால் சரிதான். பிரதிவாதியின் சொத்திலிருந்து ஏ பட்டிகை சொத்திற்க்கு செல்லும் பாதை எத்தனை அடி நீளம் இருக்கும் என்றால் தெரியாது. நான் பிரதிவாதியின் சொத்தில் இருப்பதாக சொல்லும் பாதைக்கு விளம்புகை பரிகாரமோ அல்லது வசதி உரிமை பரிகாரமோ கோர வில்லை என்றால் கேட்கவில்லை. அவ்வாறு விளம்புகை பரிகாரம் கேட்காமல் நான் கேட்டு உள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. தற்போது உரிமையாளராக உள்ள புஸ்பம் மற்றும் ஜோஸ்வா ஆகியோரை நான் வழக்கில் சேர்க்கவில்லை என்றாலும் வருவேல்நாடார் மற்றும் வைத்திய நாதன் ஆகியோரின் வாரிசுகள் மற்றும் பின் அவகாசிகளை நான் வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

3. அவ்வாறு அவசிய கட்சிகாரர்களை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கததால் எனது வழக்கு நிலைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. நான் வா.சா.ஆ. 1 ஆவணம் மூலம் நோசமணி மற்றும் ராஜ்மோகன் என்பவர்களிடம் இருந்து தலா 3.750 செண்ட் கிரயம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி 2 நபர்களுக்கு முன்அவகாசி காந்திமதிபாய் என்றால் சரிதான். மேற்படி காந்திமதிபாய்

மேற்படி நேசமணி மற்றும் ராஜ்மோகன் ஆகியோருக்கு எழுதி கொடுத்த ஆவணத்தில் வழக்கு பி பட்டிகை சொத்து குறிக்கவில்லை என்றால் சரியல்ல. முதன்முதலில் வா.சா.ஆ.1 ஆவணத்தில் தான் வழிபாதை குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல. அவ்வாறு அவர்களுக்கு உரிமை இல்லாத சொத்தை பொறுத்து எழுதிக்கொடுத்த ஆவணம் பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.

4. 1ம் பிரதிவாதி மேற்படி காந்திமதி என்பவரிடம் இருந்து 14.04.1986 ல் கிரயம் பெற்றுள்ளார்கள் என்றால் சரிதான். அதே தினத்தில் 1ம் பிரதிவாதி சுப்பிரமணிய நாடார் என்பவரிடம் இருந்து 2 செண்ட் சொத்து கிரயம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். மேற்படி 2 சொத்துக்களும் சேர்ந்து தான் உள்ளது என்றால் சரியல்ல, இடையில் வழிபாதை உள்ளது. ஏ பட்டிகை சொத்திற்க்கு செல்வதற்கு ஏ பட்கை சொத்தின் தென்கிழக்கு மூலையில் 16.10.2018 ல் சாந்தகுமாரி, ஜென்சி ஜெயமலர், ஐரின் பொன்மலர், ஜெனின் பிரபு ஆகியோரிடம் இருந்து 1.280 செண்ட் சொத்து கிரயம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான், பாதைக்கு என்று வாங்கவில்லை.

5. நீதிமன்ற ஆணையர் தனது அறிக்கையில் பாதையை குறிப்பிட்டுள்ளாரா என்றால் குறிப்டுள்ளார். மேற்படி 1.280 செண்ட் வழியாக பிராதன சாலையில் இருந்து எனது சொத்திற்க்கு சென்று அடையளாம் என்றால் சரிதான். மேற்படி 1.280 செண்ட் சொத்தில் மின் கம்பம் உள்ளது என்றால் சரிதான். நான் ஏற்கனவே இருக்கும் வழிபாதையை மறைத்து புதிதாக வழிபாதையை ஏற்படுத்த வேண்டும் என்று இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பி பட்டிகை என்ற பாதையே கிடையாது என்றாலும் நான் உண்மையான உரிமையாளர் மீது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோர முடியாது என்றாலும் சரியல்ல.

6. நீதிமன்ற ஆணையர் இடத்தை பார்வையிட்ட பின்பு தான் அனைவரின் சொத்துகளின் சரியான புல எண் அனைவருக்கும் தெரிய வந்தது என்றால் சரிதான். எனது வழக்கிற்க்கு எந்த வழக்கு மூலமும் இல்லை என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் நான் தாக்கல் செய்துள்ள உள்ள ஆவணங்கள் வழக்கிற்க்கு சம்பந்தமே இல்லை என்றாலும் எனது பிரதிவாதி செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ப்பட வேண்டியது என்றாலும் சரியல்ல.

(ஒப்பம்)

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

இரணியல்.